LIBRARY
17 MAR 1967
STATE LEGISLATURE, MADRAS

THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

Wednesday, 9th November 1966.

The House met in the Assembly Chamber, Fort St. George, at half past eight of the clock, Mr. Speaker (The HON. SRI S. CHELLAPANDIAN) in the Chair.

I.—QUESTIONS AND ANSWERS.

PRIVATE NOTICE QUESTION.

தி. மு. க. தலைவர் திரு. அண்ணாத்துரைக்கு எதிராக ஆர்ப்பாட்டம்

* 1. *தனி நபர் கேள்வி.—திரு. இரா. நெடுஞ்செழியன் : கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—*

(அ) திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச் செயலாளரும் இந்தியப் பாராளுமன்ற மக்கள் அவை உறுப்பினருமான அறிஞர் சி. என். அண்ணாத்துரை அவர்கள் கோவை மாவட்டத்தில் சுற்றுப் பயணம் மேற்கொண்டபோது, 5-11-1966 அன்று உடுமலைப்பேட்டைக்கும் ஜல்லிப்பட்டிக்கும் இடையில் நூற்றுக்கு மேற்பட்டவர்கள் திட்டமிட்டுக் கார்களை வழி மறித்துக் கார்களை தாக்கியிருப்பதை அரசு அறியுமா ?

(இ) இரண்டு கார்கள் தாக்குதலுக்கு உள்ளாகி, சேதப் படுத்தப் பட்டிருப்பதை அரசு அறியுமா ?

(உ) அது குறித்து எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் என்ன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) *to* (*c*) At about 10 p.m. on 5th November 1966 a party of the members of the Dravida Munnetra Kazhagam including the Coimbatore district Secretary of the party was proceeding in cars from Udumalpet to Jallipatti to address a public meeting in Jallipatti. A crowd of about 100 labourers of Thirumurthi Mills situated about 2 miles from Udumalpet who intended to stage a black flag demonstration to Sri Annadurai, M.P. while he was passing by the side of the Mill, shouted at the passing cars and hit two of the cars with flag poles causing few dents in the car. At the time of this incident Sri Annadurai was addressing a pubilc meeting at Udumalpet. On receipt of information about the above incident the Inspector of Police, Udumalpet rushed to the scene. On a complaint from the local Dravida Munnetra Kazhagam Secretary, the Police have registered a case against the labourers. The case is under investigation.

(அ) முதல் (உ) வரை : திராவிட முன்னேற்றக் கழகத்தின் கோயம்புத்தூர் மாவட்ட செயலாளர் மற்றும் சிலரும் 5-11-1966 அன்று சுமார் இரவு 10 மணிக்கு ஜல்லிப் பட்டியில் பொதுக்கூட்டம்

ஒன்றில் உரையாற்றுவதற்காக உடுமலைப்பேட்டையிலிருந்து ஜல்லிபட்டிக்கு கார்களில் சென்று கொண்டிருந்தனர். உடுமலைபேட்டையிலிருந்து சுமார் 2 மைல்கள் தூரத்திலுள்ள திருமூர்த்தி ஆலையின் 100 தொழிலாளர்கள் திரு. அண்ணாத்துரை, எம்.பி. அந்த ஆலை வழியாக சென்று கொண்டிருக்கும்போது அவருக்கு கறுப்புக் கொடி காட்ட விரும்பினார்கள். அவர்கள் அப்பொழுது அவ்வழியில் சென்று கொண்டிருந்த கார்களை நோக்கி கூக்குரலிட்டு இரண்டு கார்களை கொடி கம்பங்களைக் கொண்டு தாக்கினார்கள். இதனால் அந்த இரண்டு கார்களுக்கும் ஓரளவு சேதம் ஏற்பட்டது. இந்நிகழ்ச்சி நேரிட்ட நேரத்தில் திரு. அண்ணாத்துரை உடுமலைப் பேட்டையில் பொதுக்கூட்டம் ஒன்றில் பேசிக்கொண்டிருந்தார். இந்நிகழ்ச்சியைப்பற்றிய தகவல் கிடைத்தவுடன், உடுமலைப் பேட்டை போலீஸ் இன்ஸ்பெக்டர் நிகழ்ச்சி நேர்ந்த இடத்திற்கு விரைந்து சென்றார். உள்ளூர் தி.மு.க. செயலாளர் புகார் செய்ததின் மேல் போலீசார் அத் தொழிலாளர்களுக்கு எதிராக வழக்கு ஒன்றை பதிவு செய்துள்ளார்கள். இது இப்போது புலன் விசாரணையில் உள்ளது.

திரு. மு. கருணாநிதி : அண்ணா அவர்களுக்கு கறுப்புக்கொடி காட்டுவதற்கு திருமூர்த்தி மில் தொழிலாளர்கள் திட்டமிட்டிருந்தார்கள் என்று கூறினார்கள். கறுப்புக்கொடி காட்டவேண்டுமென்ற இடத்தில் போலீஸ் பாதுகாப்பு முன்கூட்டியே போடாததற்குக் காரணம் என்ன ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : கறுப்புக்கொடி காட்டுவதற்கு திட்டமிட்டார்கள் என்பது போலிசாருக்குத் தெரிந்ததா என்பதற்குத் தகவல் இல்லை.

திரு. கே. ஏ. மதியழகன் : கறுப்புக்கொடி காட்டுவதற்கு சாதாரணமாக முன்கூட்டியே நோட்டீஸ் கொடுக்கப்படுகிறது. அப்படி ஏதேனும் போலீசாருக்கு நோட்டீஸ் கொடுக்கப்பட்டதா ? அந்த நோட்டீஸின் பேரில் போலீசார் நடவடிக்கையெடுக்காமலும், பந்தோபஸ்த் செய்யாமலும் அவர்களுக்கு உடைந்தையாக இருந்தார்கள் என்று சொல்லப்படுகிறது. அதைப்பற்றித் தகவல் சொல்வார்களா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : போலீசாருக்கு சில பேர் நோட்டீஸ் கொடுக்கலாம். ஆனால், எல்லோரும் அப்படிக் கொடுப்பதில்லை. போலீசாருக்கு நோட்டீஸ் கொடுத்திருந்தால் அவர்கள் உஷாராக நடவடிக்கை எடுப்பார்கள். போலீசார் அதற்கு உடந்தையாக இருந்தார்கள் என்று சொல்லுகிறார்கள். அது முற்றிலும் தவறு. அது அவர்களுடைய கட்சிக்கும் நல்லதல்ல.

திரு. கே. ஏ. மதியழகன் : இந்தக் கலவரங்கள் தொடர்ந்து நடந்திருக்கின்றன. அங்கே இருக்கின்ற தொழிலதிபர் மணி என்பவர் திராவிட முன்னேற்றக் கழகக் கொடியை வெட்டிவிட்டிருக்கிறார்கள். டி.எஸ்.பி. அவர்களிடம் அந்த மாவட்டச் செயலாளர்

9th November 1966]

அதைப்பற்றி பதிவு செய்திருக்கிறார். தொடர்ந்து வருகின்ற கலவரங்களில் இது இரண்டாவது கட்டம் என்பதை முதல் அமைச்சர் அவர்கள் மறுக்கிறார்களா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: அதெல்லாம் எனக்குத் தெரியாது.

திரு. மு. கருணாநிதி : கறுப்புக்கொடி காட்டுவதற்கு முயற்சிகள் எடுத்தார்கள் என்பது விளைவிற்கு மாறான வகையிலே அரசினர் தருகின்ற செய்தி. அண்ணா அவர்களுக்கு எதிராக மில் தொழிலாளர்கள் ஆர்ப்பாட்டங்கள் நடத்துவதற்குக் காரணம் எதுவும் இல்லை. ஆகையால், அந்த விளைவிற்குப் பிறகு செய்த கற்பனைதான் இது என்பதை ஒப்புக்கொள்வார்களா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: புலன் விசாரிக்கப்பட்டு வருகிறது என்று சொன்னேன். அதைப்பற்றி விவரம் தெரிந்த பிறகுதான் சொல்லமுடியும். கனம் உறுப்பினர் அவர்களுக்குத் தெரிந்தால் அதை அவர்கள் வைத்துக்கொள்ளலாம். எனக்கும் தெரிவிக்கலாம்.

திரு. கே. ஏ. மதியழகன் : விவகாரம் நடந்த இடம் உடுமலைப் பேட்டை நகரத்திலிருந்து இரண்டு மைல் தொலைவிலே உள்ள ஒரு இடம் கோடிப்பட்டி என்ற ஊர்தான் அது. நானும் அந்த ஊர்க் காரன்தான், அதனால்தான் எனக்குத் தெளிவாகத் தெரியும். 100 பேர்கள் கம்பு கொண்டு மாவட்டச் செயலாளர்களுடைய காரைத் தாக்கி இருக்கிறார்கள். அதற்குப் போலீசார் என்ன சமாதானம் சொல்லுகிறார்கள் ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : சமாதானம் சொல்வதற்கு ஒன்றும் அவசியம் இல்லை. போலீசார் தங்களுடைய கடமையைச் செய்வதில் தவறுவதில்லை.

திரு. மீ. கலியாணசுந்தரம் : கனம் சபாநாயகர் அவர்களே, போலீஸார் தாங்கள் செய்ய வேண்டிய கடமையிலிருந்து தவற வில்லை என்று எந்த ஆதாரத்தின் பேரில் சொல்லுகிறார்கள் ? எனக்குத் தெரிந்த வரையில் . . .

கனம் திரு. எம். பக்தவத்சலம் : நான் முதலிலேயே சொல்லி விடுகிறேன். போலீஸாரிடமிருந்து எனக்கு அறிக்கை வந்திருக் கிறது.

திரு. மு. கருணாநிதி : போலீஸார் புலன் விசாரணை செய்கிறார்கள் என்றால், மில் தொழிலாளர்கள் யாரையாவது, அல்லது தொழி லாளர்கள் தலைவரையாவது கைது செய்திருக்கிறார்களா ? அப்படிக் கைது செய்து விசாரித்தார்களா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : நாம் வேண்டுகிற முறையில் போலீஸார் செய்யமாட்டார்கள். அவர்கள் எப்படி எப்படிச் செய்ய வேண்டுமோ அப்படிச் செய்வார்கள்.

திரு. கே. ஏ. மதியழகன் : இந்தக் கலவரத்திற்குக் கதாநாயகனுடைய மில் அதிபர்கள் கோயம்புத்தூரைச் சேர்ந்தவர்கள், மத்திய அமைச்சர் திரு. சுப்பிரமணியம் அவர்களுக்கு வேண்டியவர்கள் என்பதால் போலீஸார்கள் தலையிடுவதில்லை என்பது அமைச்சருக்குத் தெரியுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அமைதிக்கு யார் பங்கம் விளைவித்தாலும் போலீஸார் நடவடிக்கை எடுத்துக்கொள்வார்கள். கனம் அங்கத்தினர் கேட்கிற கேள்வியில் கட்சிக் கண்ணோட்டத்தை அமைக்கிறார்கள். அவ்வாறு அமைத்தால் அப்படியே பேசிக்கொண்டு போகலாம்; பிரசாரத்திற்காகப் பேசலாம். ஆனால் போலீஸாரை இதிலே ஈடுபடுத்துவது சரியல்ல.

திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, அண்ணா அவர்கள் கோவை மாவட்டத்தில் ஒரு மாத காலமாகச் சுற்றுப் பிரயாணம் செய்கிறார்கள். தமிழ்நாட்டில் உள்ள முக்கியமான கட்சியின் தலைவர் என்ற முறையில் அவர்களுக்கு போலீஸ் பாதுகாப்பு அளிக்கப்பட்டிருக்கிறதா ? இல்லையென்றால் இனிமேலாவது அளிக்கப்படுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : போலீஸார் எத்தகைய பாதுகாப்பு அளிக்கவேண்டுமோ அதற்கு ஏற்பாடு செய்திருக்கிறார்கள். முன்பே அவர்களுக்கு பாதுகாப்பு அளிக்கப்பட்டுத்தான் வந்தது. குறிப்பிட்ட சம்பவத்திற்குப் பிறகு மேலும் கொஞ்சம் அதிகமான பாதுகாப்புக்கு அவர்களுடைய சுற்றுப் பிரயாணம் முடிகிற வரையில் ஏற்பாடு செய்திருக்கிறார்கள் என்ற தகவல் கிடைத்திருக்கிறது.

திரு. கே. ஏ. மதியழகன் : இந்தச் சம்பவம் நடந்ததற்குப் பிறகு அவர்கள் நான்கு கூட்டங்களில் பேச வேண்டியிருந்தது. இதை அறிந்த பிறகு அந்தக் கூட்டங்களில் ஏதாவது கலவரம் ஏற்பட்டு ரத்தக்களரி ஆகிவிடுமோ என்று அந்தக் கூட்டங்களை ரத்து செய்திருக்கிறார்கள். போலீஸார் அந்த நான்கு கூட்டங்களுக்கும் வேண்டிய பந்தோபஸ்து கொடுத்து அந்தக் கூட்டங்களை நடத்துவதற்குத் தவறியதன் காரணம் என்ன என்று சொல்லுவார்களா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : கூட்டம் நடத்துவதிலே ஏதோ காரணத்தை வைத்துக்கொண்டு நடத்துவதை விட்டு விட்டால், போலீஸார் பந்தோபஸ்து கொடுக்கவில்லை என்பது அல்ல. அவர்களுக்கு ஏதோ கவலை இருக்கலாம்; ரத்து செய்யலாம். அதற்கு போலீஸார் பொறுப்பு அல்ல.

திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, உடுமலைப்பேட்டையில் இருந்து மூன்று மைல்கள் தொலைவில் மில்லின் வாயில்புறத்தில் 100 பேர்கள் கறுப்புக்கொடி காட்ட இருக்கிறார்கள் என்ற தகவல் ஒற்றர்கள் மூலம் கிடைக்கவில்லையா ? போலீஸார் உடனடியாக விரைந்து சென்றிருக்கக் கூடாதா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : எத்தனையோ சம்பவங்கள் நடக்கின்றன. போலீஸாரைப் பற்றிக் குறிப்பாகச் சொன்னால் அதைப்பற்றி நான் விசாரிக்கத் தயாராக இருக்கிறேன். ஏதோ

9th November 1966]

100 பேர்கள் வந்தார்கள், கறுப்புக் கொடி காட்டினுர்கள் என்றுல், போலீஸார் செய்ய வேண்டியதைச் செய்யத் தவறி விட்டார்கள் என்பதற்குக் குறிப்பாக இந்த மன்றத்திலும் சரி, அல்லது பின்னுல் எழுதி அனுப்பினுலும் சரி, அதைப்பற்றி விசாரிக்கத் தயாராக இருக்கிறேன்.

திரு. மீ. கலியாணசுந்தரம் : ஸார், இப்போது அங்கே மாவட்ட போலீஸ் பொறுப்பை ஏற்று இருக்கும் அதிகாரி, பொறுப்பை ஏற்ற பிறகு எதிர்க்கட்சிகளுக்குத் தொந்தரவு வருவதாக என் கட்சியைச் சேர்ந்தவர்களிடமிருந்தும் புகார் வந்திருக்கிறது. இப்போது அவர் செய்துகொண்டிருக்கிற காரியங்கள், எடுத்துக் கொண்டிருக்கிற நடவடிக்கைகள் எதிர்க்கட்சிகளுக்குப் பாதகமாக இருக்கிறது, ஆளும் கட்சியை ஆதரிப்பதாக இருக்கிறது என்று என்னிடத்திலும் தகவல் இருக்கிறது. இந்த நிகழ்ச்சி சம்பந்தமாக போலீஸார் தங்களுடைய கடமையைச் சரியாகச் செய்திருக் கிருர்களா என்று பரிசீலிப்பது நியாயம் என்று கருதுகிறேன். அப்படிப் பரிசீலிப்பார்களா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : எனக்குத் தெரிந்த வரையில் அங்கு இருக்கிற போலீஸ் அதிகாரி அப்படிப் பட்சபாதமாக நடப்பவர் அல்ல. காங்கிரஸ்காரர்கள் அந்த மாதிரிப் புகார்கள் சொல்லுவதையும் கூட நான் கேட்டிருக்கிறேன். அதையும் நான் நம்புவதில்லை.

கனம் சபாநாயகர் : ஷார்ட் நோட்டீஸ் கேள்வி, நம்பர் 2. . . .

SRI K. A. MATHIALAGAN : Sir, many hon. Members want to put supplementary questions.

MR. SPEAKER : This is not a debate. This is question hour and the main persons have taken part in it.

திரு. எம். எஸ். மணி : எங்களுக்கெல்லாம் சான்ஸே இல்லை.

கனம் சபாநாயகர் : எனக்கு டிஸ்க்ரீஷன் இருக்கிறது. எந்த அளவுக்கு உப-கேள்விக்கு வாய்ப்புக் கொடுக்க வேண்டுமோ அந்த அளவுக்குக் கொடுத்தாகி விட்டது.

Scholarship

* *S.N.Q. No.* 2.—SRI M. S. SELVARAJAN : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) Whether any representations have been received recently requesting for the provision of eligibility for grant of scholarships to the converted christians from Paravan community included in the list of Most Backward Class; and

(*b*) if so, the action taken thereon ?

THE HON. SRI P. KAKKAN : (*a*) Yes.

(*b*) It is under the consideration of the Government.